In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 Prosecution witness P.W.27

Name: Karthick Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 16-09-2025.

**(A1 produced thorugh V.C. A3 to A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் பழனி தாலுகா காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2023ம் வருடம் திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்து மேறப்டி காவல் நிலைய கு.எண்.447/2023 u/s 302 IPC வழக்கின் கொலையுண்டு இறந்துபோன சரவணக்குமார் என்ற பட்டறை சரவணன் என்பவரது பிரேதத்தை 21.07.2023ம் தேதி 6.30 மணிமுதல் 8.30 மணிவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்டார். பின்னர் 8.35 மணியளவில் பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்து பின் பிரேத பரிசோதனை செய்வதற்காக ஒப்படைத்ததை பெற்று அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்தேன். பின்னர் பிரேதத்தில் இருந்த இரத்தக்கறைபடிந்த கருப்பு வெள்ளை சிமிண்ட் கலர் வட்டக்கழுத்து டீ சர்ட் ஒன்று, இரத்தக்கறைபடிந்த கருப்பு கலர் டிராக் சூட் ஒன்று, இரத்தக்கறைபடிந்த வெள்ளை புளூ வயலர் கலர் டிராயர் ஒன்று, காடாத்துணியால் பிரேதத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தம் ஆகியவற்றை பெற்று காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். இரத்தக்கறைபடிந்த

கருப்பு வெள்ளை சிமிண்ட் கலர் வட்டக்கழுத்து டீ சர்ட் ஒன்று சாபொ.14, இரத்தக்கறைபடிந்த கருப்பு கலர் டிராக் சூட் ஒன்று சாபொ.15, இரத்தக்கறைபடிந்த வெள்ளை புளூ வயலர் கலர் டிராயர் ஒன்று சாபொ.16. மேற்படி துணிகள் கைப்பற்றியதற்கு இரத்தம்தோய்த்த காடா துணி ஒப்படைப்பதற்கும் தனி அறிக்கை தாக்கல் செய்து ஆய்வாளரிடம் கொடுத்தேன். அந்த தனி அறிக்கை அதசாஆ.27. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– வழக்குரைஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.09.16 18:04:43 +0530

Principal District Judge,
Dindigul.